# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 61 /2022** **நாள் : 04.03.2022**

அனைத்து மாவட்டங்களுக்கு உட்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநகராட்சி மேயர், மாநகராட்சி துணைமேயர், நகராட்சித்தலைவர், நகராட்சி துணைத்தலைவர், பேரூராட்சித்தலைவர், பேரூராட்சி துணைத்தலைவர் ஆகிய பதவியிடங்களை நிரப்பிட சாதாரண மறைமுகத் தேர்தல்கள் இன்று (4.3.2022) தொடர்புடைய நகர்ப்புற உள்ளாட்சி அலுவலகங்களில் நடைபெற்றன.

21 மாநகராட்சி மேயர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 20 மாநகராட்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் ஒரு மாநகராட்சியில் இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளன.

21 மாநகராட்சி துணைமேயர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 15 மாநகராட்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகம், 2 மாநகராட்சிகளில் இந்திய தேசிய காங்கிரஸ், தலா ஒரு மாநகராட்சியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், சி.பி.ஐ., சி.பி.ஐ (எம்) மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி வெற்றி பெற்றுள்ளன.

138 நகராட்சி தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், 125 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், 2 இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தலா ஒரு இடத்தில் இந்திய தேசிய காங்கிரஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் சுயேட்சை 4 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 4 பதவியிடங்களுக்கு குறைவெண் வரம்பின்மை (No Quorum) உள்ளிட்ட காரணமாக தேர்தல் நடைபெறவில்லை.

138 நகராட்சி துணைத்தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 98 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், 9 இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ், 7 இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 4 இடங்களில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தலா 2 இடங்களில் சி.பி.ஐ., சி.பி.ஐ (எம்) மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் 3 இடங்களில் சுயேட்சையும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 11 பதவியிடங்களுக்கு குறைவெண் வரம்பின்மை (No Quorum) உள்ளிட்ட காரணமாக தேர்தல் நடைபெறவில்லை.

489 பேரூராட்சி தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், 395 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், 20 இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ், 18 இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 8 இடங்களில் பாரதிய ஜனதா கட்சி, 3 இடங்களில் சி.பி.ஐ(எம்), தலா 2 இடங்களில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தலா 1 இடத்தில் சி.பி.ஐ., விடுதலை சிறுத்தைகள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி மற்றும் 25 இடங்களில் சுயேட்சையும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 13 பதவியிடங்களுக்கு குறைவெண் வரம்பின்மை (No Quorum) உள்ளிட்ட காரணமாக தேர்தல் நடைபெறவில்லை.

489 பேரூராட்சி துணைத்தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், 331 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், 32 இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ், 27 இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 11 இடங்களில் பாரதிய ஜனதா கட்சி, 5 இடங்களில் சி.பி.ஐ(எம்), தலா 3 இடங்களில் பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தலா 2 இடங்களில் சி.பி.ஐ., மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தலா 1 இடத்தில் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், மனித நேய மக்கள் கட்சி மற்றும் 34 இடங்களில் சுயேட்சையும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 35 பதவியிடங்களுக்கு குறைவெண் வரம்பின்மை (No Quorum) உள்ளிட்ட காரணமாக தேர்தல் நடைபெறவில்லை.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

4/3/2022

மக்கள் தொடர்பு அலுவலர்